# வேர்களினதும் மீளத் திரும்பலினதும் கதைகள்



## வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதில் இருந்து 30 வருடங்கள்

LAW & SOCIETY TRUST

PARL
People's Alliance for Right to Land

# வேர்களினதும் மீளத் திரும்பலினதும் கதைகள்

## *வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதில் இருந்து 30 வருடங்கள்*

**அமலினி தி செய்ரா & நட்டாஷா வான்ஹாஃப்**

LAW & SOCIETY TRUST

PARL
People's Alliance for Right to Land

© 2020 சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைப்பொறுப்பின் கூட்டணி, காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி

LAW & SOCIETY TRUST

People's Alliance for Right to Land

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைப்பொறுப்பின் கூட்டணி
இல. 03,
கின்சி டெரஸ்,
கொழும்பு 08,
இலங்கை
தொலைபேசி + 94 (0) 112684845
தொலைநகல் + 94 (0) 112686843
admin@lstlanka.org
www.lstlanka.org

காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி
parlnetworksl@gmail.com
www.parlsl.com

# உள்ளடக்கம்

**ஒக்டோபர் 1990 - 30 வருடங்கள் உருண்டோடிவிட்டன………………...01**

**அறிமுகம்…………..……………………..…05**

**அவர்கள் இப்போது எங்கே?...........07**

**யாழ்ப்பாணம்………………….…..……08**

**முல்லைத்தீவு.....………………………..16**

**புத்தளம்…………………………………….24**

**நீர்கொழும்பு……….…………………..……29**

# ஒக்டோபர் 1990 - 30 வருடங்கள் உருண்டோடிவிட்டன

1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வடபுல முஸ்லிம்கள் 75000 பேர் (மாகாணத்தின் மொத்த ஜனத்தொகையில் சுமார் 5 சதவிகிதம்) இரண்டு வாரக் காலப்பகுதியினுள் அவர்களின் வாழ்விடங்களை விட்டு பலவந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்டனர். சில இடங்களில் மகாணத்தினை விட்டு வெளியேற எல்ரிரிஈயினர் 48 மணித்தியால அறிவித்தலை வழங்கியிருந்தனர். ஒக்டோபர் 15 இல் சாவகச்சேரியில் ஆரம்பித்த பலவந்த வெளியேற்றம் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவின் சில குறிப்பிட்ட பகுதிகள் ஆகியவற்றில் வாழ்ந்த அனைத்து முஸ்லிம்களின் வெளியேற்றத்துடனும் ஒக்டோபர் 30 ஆம் திகதி நிறைவடைந்தது. அவ்வாறு வெளியேற்றப்பட்ட குடும்பங்களில் எனது குடும்பமும் அடங்குகின்றது.

நான் அப்போது கொழும்பில் மாணவியாக இருந்தேன். எனது குடும்பத்தினருக்கு என்ன நடந்தது என்ற அங்கலாய்ப்பில் நான் மிகவும் அல்லலுற்றேன்.

அதிகமான குடும்பங்கள் 500 ரூபா பணத்துடன் சில உடுதுணிகளை மாத்திரமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டன. சில குடும்பங்கள் வெறுங்கையுடன் வெளியேறியிருந்தன. தென் மாகாணத்தின் எல்லையினை நெருங்கும் வரை போக்குவரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாத மக்கள் பல நாட்கள் நடந்தே ஊரைக் கடந்திருந்தனர். இற்றைவரை என் சமுதாய மக்களின் துன்பங்களும் துயரங்களும் அடையாளம் காணப்படவுமில்லை ஆற்றப்படவுமில்லை. மூன்று தசாப்த காலமாக உள்ளூர்க் குடியிருப்பாளர்களும் அரசாங்க அதிகாரிகளும் சர்வதேசக் கொடையாளர்களும் தெற்கு முஸ்லிம்களும் காட்டிய புறக்கணிப்பும் புரிதலின்மையும் நம்புவதற்கு யாருமில்லையே எனும் உணர்வினை இந்த வடபுல மக்களின் உள்ளங்களில் விதைத்துவிட்டன.

சிவில் யுத்தம் 2009 மே மாதத்தில் முடிவடைந்ததைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையில் முஸ்லிம்கள் திரும்பி வர ஆரம்பித்தனர். ஆனால் திரும்பி வருபவர்கள் வரவேற்கப்படவில்லை. சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் திரும்பி வரும் முஸ்லிம்களின் எண்ணிக்கையினைக் குறைத்துக் காட்டுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. இது வளங்களின் ஒதுக்கீட்டினைக் கணிசமாகக் குறைப்பதுடன் மீள்குடியேற்றத்திற்குத் தேவைப்படும் அபிவிருத்தி உதவியினையும் பாதிக்கின்றது. முஸ்லிம்கள் புத்தளத்தில் ஏற்கனவே குடியேறி நன்கு வாழ்ந்து வருகின்றனர் என்றும் அரசாங்கத்தின் முன்னுரிமை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மீது இருக்கவேண்டும் என்றும் வடக்கிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் பதிலளித்து வருகின்றனர். போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் தலைவிதி தொடர்ந்தும் துயரம் மிக்கதாகவே இருந்து வருகின்றது. யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தம்

கடந்த பின்னரும் பலர் இன்னும் காணிக்காகவும் வீடமைப்புக்காகவும் ஏனைய அடிப்படைத் தேவைகளுக்காகவும் காத்திருக்கின்றனர். மேலும் ஓர் ஆபத்தான தளத்தில் உண்மைக்காகவும் நீதிக்காகவும் இம்மக்கள் போராடி வருகின்றனர். இத்தேவைகள் இன்றியமையாதவை. ஆனால் இவற்றினைத் தீர்ப்பது கூட்டுத் திரும்பலுக்கான வடக்கு முஸ்லிம்களின் உரிமையினைத் தடுத்து நிறுத்தக்கூடாது.

## அடுக்கடுக்காய்த் தவறுகள்

இனச்சுத்திகரிப்பினை மேற்கொண்டதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் கடுமையான விமர்சனங்களுக்கு முகங்கொடுத்தபோதும், 2002 முதல் 2005 வரை நடந்து முடிந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் அனைத்திலும் புலித் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இவ்விடயம் தொடர்பில் எதுவும் கூறாது காத்த மௌனம் பட்டவர்த்தனமானது. பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட நோர்வே நாட்டுத் தரகர்கள் உள்ளிட்ட எந்தப் புண்ணியவானும் வடபுல முஸ்லிம்கள் அவர்களின் வாழிடங்களுக்குக் கூட்டாகத் திரும்பிச் செல்வதற்கான உரிமை பேச்சுவார்த்தைக்கான முன்நிபந்தனை என்பதைக் கருத்திற்கொள்ளவே இல்லை. 2002 ஆம் ஆண்டு சமாதானச் செயன்முறையின் போது தம் சொந்த மண்ணில் குடியேறச் சென்ற உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுடன் (ஐடிபிக்கள்) ஒப்பிடுகையில் முஸ்லிம்கள் திரும்பிச் சென்றமை மிகக் குறைவாகக் காணப்பட்டமைக்கான பிரதான காரணம் இதுவேயாகும்.

வடபுல முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழுவினை நியமிக்கப்போவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 2005 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வாக்குறுதியளித்தார். 2009 இல் யுத்தம் முடிவடைந்தமையினை நினைவுகூர்ந்து நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "வடபுல முஸ்லிம்கள் துன்புறுத்தப்பட்டு அவர்களின் வாழிடங்களை விட்டுப் பலவந்தமாகப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டபோது அவர்களின் இடப்பெயர்வினைத் தடுத்து நிறுத்த யாரும் முன்வரவில்லை..... இப்போது எனது அரசாங்கம் பயங்கவரவாதத்தினை முடிவுக்குக் கொண்டுவந்துள்ள காரணத்தினால், 2010 மே மாதமளவில் முஸ்லிம்களை மீளக் குடியமர்த்த சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்." அவரின் எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. யுத்தத்திற்குப் பின்னரான தேசத்தினைக் கட்டியெழுப்பும் துரித செயன்முறையில் வடபுல முஸ்லிம்களின் உரிமைகளை முன்னுரிமைப்படுத்த முன்னாள் ஜனாதிபதி தவறிவிட்டார்.

களத்திலே, யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து வடக்கு முஸ்லிம்கள் தம் சொந்த வாழிடங்களை நோக்கித் திரும்ப ஆரம்பித்ததும் பதற்ற நிலை உருவாக ஆரம்பித்தது. வன்னியினுள் பல்வேறு இடப்பெயர்வுகளை அனுபவித்த யுத்தத்தினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களைப் போலல்லாது

பலவந்தப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் யுத்தப் பிரதேசங்களிலுள்ள தங்களின் இடங்களில் இருந்து விலகி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் தமிழர்கள் அனுபவித்த பயங்கரமான இழப்புக்களையும் அனுபவிக்காதவர்களாக இருந்தனர். இதனால் முன்னர் ஒன்றிணைந்து வாழ்ந்த சமுதாயங்கள் வளங்களுக்காகப் போட்டிபோடத் தொடங்கி அவநம்பிக்கையுடன் வாழும் நிலை உருவானது. எனது நிறுவனமான மன்னார் பெண்கள் அபிவிருத்திச் சம்மேளனம் மன்னாரில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்களுக்கு மத்தியில் உள்ளூர் மட்டத்தில் நிலவிய இவ்வாறான பகைமிகுந்த போட்டியினை நேரில் தீர்க்க நாடியது. ஆனால் அவ்வாறான முயற்சிகள் அரசாங்க மட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

2015 முதல் 2019 வரையான இடைமாற்ற நீதிக் காலப்பகுதியின் போது சூழ்நிலை தொடர்ந்தும் மாறாமலேயே இருந்தது. முன்மொழியப்பட்ட பொறிமுறைகள் மூலம் வடக்கு முஸ்லிம்களின் துயரங்களைத் தீர்ப்பதற்கான ஆரம்பகால முயற்சிகள் கைவிடப்பட்டன. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட OISL விசாரணை, 2002 பெப்ரவரி யுத்தநிறுத்தம் முதல் 2011 வரையான காலப்பகுதியினை மட்டுமே ஆராய்ந்தது. ஆனால் 1990 இல் நடத்தப்பட்ட முஸ்லிம் மக்களின் வெளியேற்ற நிகழ்வு போன்ற முன்னைய குற்றச் செயல்களை ஆராயாமல் விட்டுவிட்டது. யுஎன்எச்சிஆர் பிரகடனமான 30/1 இன் மூலமாக இடைமாற்ற நீதிக்கு இலங்கை அரசாங்கம் கடப்பாடு கொண்டபோதும் இவ்வாறான முன்னைய நிகழ்வுகளைத் தீர்த்துவைக்கக் கடப்பாடு கொள்ளவில்லை. நல்லிணக்கப் பொறிமுறை பற்றிய கலந்தாலோசிப்புச் செயலணியினால் நடத்தப்பட்ட பொது விசாரணையில் முனைப்பான வகிபாத்திரத்தினை வகிக்கும் பொறுப்பினை வடக்கு முஸ்லிம்கள் தம் கடமையாய் வரித்துக்கொண்டனர். ஆனால் கிடைத்த பயன் எதுவுமில்லை. இதன் காரணமாகத் தற்போதைய இழப்பீடு வழங்கும் கொள்கை வடக்கு முஸ்லிம்களின் இழப்பினை எந்த வடிவிலும் தனித்துவமாக அங்கீகரிக்கவில்லை.

**என்ன செய்யப்படலாம்?**

தீர்க்கப்படாத இப்பிரச்சினை தொடர்பாக வெகு சொற்பமானவர்கள் அனுதாப உணர்வு கொண்டிருந்தாலும்கூட, ஒட்டுமொத்தத் தமிழ் அரசியல் சமூகமும் முஸ்லிம்கள் 1990 இல் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் நீண்டகாலமாக மௌனம் காத்துவருகின்றமை இங்கு பதிவுசெய்யத்தக்க உண்மையாகும். 2009 செப்டெம்பரில் அந்நாள் ஜனாதிபதி ராஜபக்சவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய சந்திப்பின்போது இப்பிரச்சினையினை முதற்தடவையாகப் பகிரங்கமாக எழுப்பியது. 2013 இல் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றிபெற்றதும் அதற்குக் கிடைத்த போனஸ் ஆசனத்தினை முஸ்லிம் ஒருவருக்கு வழங்கியது.

இவ்வாறான அணுகுமுறைகளை வடக்கு முஸ்லிம்கள் வரவேற்றனர். அண்மைய பாராளுமன்றத் தேர்தலில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண முஸ்லிம்கள் டிஎன்ஏ பிரதிநிதிகளுக்குப் பகிரங்க ஆதரவினை வழங்கியிருந்தனர். மெச்சத்தக்க இந்த அரசியல் நகர்வினைத் தாண்டி, பெரும்பான்மையான தமிழ்த் தலைவர்களும் புத்திஜீவிகளும் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுடன் தமது கூட்டொருமையினை இன்னும் வெளிக்காட்டவில்லை என்பது கவனத்திற்கொள்ளத்தக்கதாகும்.

நிலைமை இவ்வாறிருக்க, யாரிடமிருந்தும் எதையும் பெரிதும் எதிர்பார்க்காது தமது வாழ்வினை மீண்டும் பூச்சியத்தில் இருந்து ஆரம்பித்து தமிழ் உறவுகளுடன் சகவாழ்வு வாழலாம் என்ற ஆர்வத்துடன் முஸ்லிம்கள் வடக்கிற்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். சமமாக நடத்தப்படுவதற்கான வாய்ப்பு, தமது காணிகளை அணுகுவதற்கான வாய்ப்பு, அடிப்படை வாழ்வாதார உதவிகள் மேலும் காடு மண்டிக் கிடக்கும் தமது காணிகளைத் துப்பரவுசெய்தல் போன்ற சாதாரண கோரிக்கைகளுக்கு அப்பால் இம்மக்கள் விடுத்திருக்கும் முக்கியமான வேண்டுகோள்கள் சொற்பமானவைதான். வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அவர்களின் சொந்த இடங்களில் தங்களின் சொத்துக்களை மீளக் கோருவதற்கும் வாழ்வாதார உதவிகளைப் பெறுவதற்கும் உரிமையினைக் கொண்டுள்ளனர் என்பதையும் தற்காலிகமாக இவர்களின் குடும்பங்கள் வேறு இடங்களில் வாழும் தெரிவினை மேற்கொண்டிருந்தாலும் இந்த உரிமை அவர்களுக்கு உண்டு என்பதையும் தமிழ் அரசாங்க அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அங்கீகரிப்பது இன்றியமையாததாகும். நம்பிக்கை வேர் பிடிக்கும்போது, திரும்பி வருவது பாதுகாப்பானது என அதிகமான வடக்கு முஸ்லிம்கள் உணர்ந்து தங்களின் பூர்வீகக் காணிகளையும் கலாசாரப் பாரம்பரியங்களையும் மீண்டும் கோருவார்கள். எவ்வாறாயினும் இம்மக்களின் திரும்பலுக்குத் தற்போது கூட்டு எதிர்ப்பு இருப்பதாகவே தென்படுகின்றது. இந்த நிலைமை வடக்கு முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் மேலதிக இனப் பிளவினை உருவாக்கி, பேரினவாதத்திற்கு நலன்சேர்த்து, தமிழர்களின் நீண்டகால நலன்களையும் அவர்களின் இன்னும் பூர்த்தி செய்யப்படாத அரசியல் அபிலாஷைகளையும் கீழறுக்கும். சர்வதேச சமுதாயத்தின் உதவியுடனும் அனுதாபமிக்க சிங்கள மக்களின் உதவியுடனும் இரண்டு சமுதாயங்களினதும் நன்மைக்காக இம்மக்களின் வெவ்வேறான, ஆனால் ஆழமாகப் பிண்ணிப் பிணைந்த துன்பங்களையும் துயரங்களையும் தீர்ப்பதற்காக உறுதியான ஒத்துழைப்பும் நீடித்த முயற்சிகளும் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும்

**சிறீன் சரூர்**

# அறிமுகம்

1990 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த முஸ்லிம் பெண்கள் தற்போது முகங்கொடுக்கும் யதார்த்தங்களைக் கண்டறியும் முயற்சியில் சேகரிக்கப்பட்ட கதைகளின் சேகரத்தினை இந்த ஆக்கம் உள்ளடக்குகின்றது.

வெகு சொற்பமான ஊடகங்கள் அல்லது சிவில் சமூகம் காட்டும் ஈடுபாட்டிற்கு அப்பால் எவ்வாறு வடபுல முஸ்லிம்களின் கதை மறக்கப்பட்டுள்ளது என்பதைச் சமுதாயத்தின் பல உறுப்பினர்கள் குறிப்பிட்டனர். பலவந்தமாக வெளியேற்றப்பட்டு முப்பது வருடங்கள் கடந்த நிலையில் இந்தச் சமுதாயம் அனுபவித்த இன்னல்களையும் இன்னும் அனுபவித்துவரும் இன்னல்களையும் பதிவுசெய்வதற்காகவே இந்தப் பணி பிரதானமாக முன்னெடுக்கப்பட்டது.

புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் நீர்கொழும்பில் வசிக்கும் சமுதாயங்களுடன், குறிப்பாகப் பெண்கள் குழுக்களுடன் 2020 இன் ஆரம்பப் பகுதியில் நடத்தப்பட்ட பல கலந்துரையாடல்களையே இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள குரல்கள் எதிரொலிக்கின்றன. திரும்பிச் செல்வதற்கான தெரிவினதும் செயன்முறையினதும் சிக்கற்தன்மையினைக் கலந்துரையாடல்கள் உள்வாங்கியுள்ளன. தெரிவும் செயன்முறையும் நிச்சயமாக ஒற்றைப் பரிமாணம் கொண்டவையாகவோ அல்லது எளிமையானவையாகவோ இல்லை என்பதைக் கலந்துரையாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. திரும்பிச் செல்பவர்கள் தாங்கள் முகங்கொடுத்த நிர்வாக மற்றும் அரசியல் தடைகள் பற்றிக் குறிப்பிட்டனர். மேலும் தம்மைச் சுற்றியுள்ள தமிழ் சமுதாயத்துடனான உறவுகள் பற்றியும் குறிப்பிட்டனர்.


தாங்கள் எங்கே இடம்பெயர்ந்து சென்றனரோ அங்கேயே இன்னும் வாழ்ந்துவருபவர்கள் தம்மைச் சுற்றி வாழ்ந்துவரும் சமுதாயங்களுடன் தாம் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் ஒன்றிற்கும் மேற்பட்ட இடத்தில் 'இல்லத்தினைக்' கண்டுபிடிப்பதில் உள்ள சவால்கள் பற்றியும் பேசினர்.

இந்தக் கலந்துரையாடல்களில் தங்கள் நேரத்தினைச் செலவழித்துத் தங்கள் சிந்தனைகளையும் நினைவுகளையும் ஆழமான கருத்துக்களையும் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் ஆசிரியர்கள் நன்றிக் கடன்பட்டுள்ளனர். இணைப்புக்களை உருவாக்கி, இதனைச் சாத்தியமாக்கி, கலந்துரையாடலை வசதிப்படுத்துவதில் உதவி வழங்கியமைக்காக பெண்கள் செயற்பாட்டுக்கான வலையமைப்பு மற்றும் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கும் ஆசிரியர்கள் நன்றி தெரிவிக்க விரும்புகின்றனர்.
அகவுரிமை, பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பெயர்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பில் பிரசைகள் ஆணைக்குழு 2001 ஆம் ஆண்டில் வெளியிட்ட 'பரிகாரத்திற்கான தேடல்: வடக்கு முஸ்லிம்களின் கதை' எனும் அறிக்கை இச்சமுதாயத்தின் இடப்பெயர்வு, புலப்பெயர்வுப் பாங்குகள் பற்றிய பூரணமானதும் விரிவானதுமான விபரங்களை வழங்குகின்ற காரணத்தினாலும் இச்சமுதாயத்தின் ஏனைய கதைகளை வழங்குகின்ற காரணத்தினாலும் ஆசிரியர்கள் பிரசைகள் ஆணைக்குழுவிற்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றனர்.

# அவர்கள் இப்போது எங்கே?

இக்கருத்திட்டத்திற்காக ஆசிரியர்கள் உரையாடிய பெண்களின் குடும்பங்கள், அவர்களின் அன்புக்குரியவர்கள் மற்றும் நண்பர்கள் 1990 ஆம் ஆண்டில் இடப்பெயர்வு நிகழ்ந்தபின்னர் இப்போது எங்கே வசிக்கின்றனர் என்பதை இப்புள்ளிகள் சுட்டிக்காட்டுகின்றன. இடம்பெயர்ந்து திரும்பிவந்த வடபுல முஸ்லிம் மக்களின் முழுமையினையும் இவை பிரதிநிதித்துவம் செய்யவில்லை.




புத்தளம், பானந்துறை, பலகைத்துறை, போரத்தோட்ட, பெரியமுல்லை, மதுரங்குளி, வணாத்தவில்லு, புளிச்சாக்குளம், சரிகமுல்ல, தொட்டவத்த, குருணாகல், கெகுணகொல்ல, அக்குரண, பேருவளை, கட்டுகஸ்தோட்டை, நாச்சிக்குடா, அளுத்கம, ஆனமடுவ, நீர்கொழும்பு, கல்பிட்டி, ஆலங்குடா, ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு



# யாழ்ப்பாணம்

1990 ஒக்டோபரில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்ட காரணத்தினால் 3,500 முஸ்லிம் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தினை விட்டு வெளியேறும் நிலையேற்பட்டது. 30 வருடங்களின் பின்னர், 750 பேர்தான் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் திரும்பியுள்ளனர்.

இடம்பெயர்ந்து சென்ற இடங்களில் நிலையான தொழில்களைப் பெற்றும் வியாபாரங்களைத் தொடங்கியும் வாழ்ந்துவருபவர்கள் பலரும் அப்பிரதேசங்களில் சேர்ந்து கல்வி பயிலும் அவர்களின் பிள்ளைகளும் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லவில்லை. சொந்த இடங்களில் மீளக் குடியேறுவதில் உள்ள சிரமங்களைத் தாங்குவதற்கு உடல் வலிமையில்லாத காரணத்தினால் முதியவர்களும் திரும்பிச் செல்லவில்லை. திரும்பிச் சென்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் 1990 இல் வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டபோது சிறுவர்களாக இருந்தவர்களாவர்.

***'முதியவர்களான எங்களில் பலர் திரும்பிச் சென்றமைக்கான காரணம் யாழ்ப்பாணத்தில் உள்ள காணிகள் எமக்குச் சொந்தமானவை எனும்***

*எமது உறுதியான திடசங்கற்பமாகும். எமது சொந்த இடம் என எம்மால் உரிமை கோரக்கூடிய இடம் அது என்பதாலாகும்.*

**இல்லத்தினை மீளக் கட்டியெழுப்பல், காணியினை மீளக் கோரல்**

யுத்தம் முடிவடைந்த உடனேயே 2010 ஆம் ஆண்டில் பல குடும்பங்கள் யாழ் குடாநாட்டிற்குத் திரும்பின. இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டத்தின் மூலம் வீடுகளைப் பெற்றுக்கொள்ள இந்த மக்கள் வருடக்கணக்காகக் காத்திருக்கும் நிலையேற்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் வீடுகளைப் பெற்றுக்கொள்ள 314 பேர் விண்ணப்பித்தனர். ஆனால் இற்றைவரை இவர்களில் 190 பேருக்கே வீடுகள் கிடைத்துள்ளன.

***"திரும்பிவந்த 750 குடும்பங்களுள், சொற்பமானவர்களுக்கு மட்டுமே சொந்தமாகக் காணிகள் உள்ளன. ஏனையோர் வாடகை வீடுகளில் வசிக்கின்றனர் அல்லது தம் உறவினர்களுடன் வாழ்கின்றனர். தங்கள் உறவினர்கள் திரும்பி வர எண்ணியிராத காலியான வீடுகளில் சிலர் வசித்துவருகின்றனர். தமது வீடுகளை விற்றவர்கள் காணிகளைப் புதிதாக வாங்கவேண்டியுள்ளது. எவ்வாறாயினும் வாடகையும் உயர்வாகவே காணப்படுகின்றது. வீடுகளும் வரையறுக்கப்பட்ட அளவிலேயே கிடைக்கக்கூடியதாக உள்ளன."***

சண்டையினால் சேதமாக்கப்பட்ட பின்னர் முப்பது வருடங்களாகப் பயன்படுத்தப்படாதிருந்த வீடுகளை அந்த வீடுகளின் உரிமையாளர்களே தங்களின் சொந்தச் செலவில் திருத்தவேண்டியிருந்தது. அரசாங்கத்தினாலும் பல்வேறு சர்வதேச வீடமைப்புக் கருத்திட்டங்களினாலும் வழங்கப்பட்ட வீடுகள் அனைத்தும் புதியவையாகும்.

திரும்பிவந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் வீடுகளை மீள நிர்மாணிப்பதற்கான உபகரணங்களும் பொருட்களும் அடங்கிய பொதிகளையும் சட்டி பானைகளையும் வழங்கியது. யுத்தத்தின் பின்னர் தமது பாரம்பரியத் தாய் நிலங்களுக்குத் திரும்பிவந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கத்தினால் மற்றுமொரு நட்டஈட்டுப் பொதி வழங்கப்பட்டது. இதற்கமைய, குடும்பங்கள் முதலில் 5000 ரூபா கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளும். இதனைத் தொடர்ந்து 25000 ரூபா கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளும்.

திரும்பி வந்த முஸ்லிம் குடும்பங்களில் சொற்பமானவற்றிற்கே 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் பல தமிழ்க் குடும்பங்கள் 25000 ரூபா கொடுப்பனவினைப் பெற்றுக்கொண்டதாகவும் தமக்கு அது கிடைக்கவில்லை என்றும் இவர்கள் குறிப்பிட்டனர். தமிழ்ப் பெரும்பான்மை வட மாகாணத்தில் உள்ள மாவட்டச் செயலகத்திலும் ஏனைய நிர்வாக

அலுவலகங்களிலும் நிலவும் பக்கச்சார்பினை இது பிரதிபலிக்கின்றது எனத் திரும்பிவந்தவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மக்கள் வெளியேற்றப்பட முன்னர் பாரம்பரிய முஸ்லிம் பிரதேசமாக இருந்த சாபி நகர் அதிகாரிகளினால் அரசாங்க நிலமாகக் குறிப்பிடப்பட்டு தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. மூர்வீதியும் அராலி வீதியும் சந்திக்குமிடத்திலுள்ள நிலம் பூர்வீகமாக முஸ்லிம்களுக்குச் சொந்தமானதாகும். ஆனால் இந்த நிலம் வயற்காணி என்றும் அதில் பயிர்ச்செய்கை மாத்திரமே மேற்கொள்ளப்பட முடியும் என்று மாவட்டச் செயலகம் குறிப்பிடுகின்றது. திரும்பிவந்த முஸ்லிம் குடும்பங்கள் இக்காணியினை மீளக் கோர முயற்சித்தபோதிலும் நீதிமன்றக் கட்டளைகள் இவர்களைத் தடுத்துவிட்டன.

இடம்பெயர்ந்த பல முஸ்லிம் ஆண்கள் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடைந்த உடனேயே வியாபாரத்திற்காக யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிவந்தனர். இச்சந்தர்ப்பத்தில் இவர்கள் தங்களின் காணிகளையும் அண்டியிருந்த ஏனைய முஸ்லிம்களின் காணிகளையும் தமிழ் மக்களுக்கு விற்றுவிட்டனர். இதனையடுத்துத் தங்கள் காணிகளும் விற்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக பல முஸ்லிம்கள் திரும்பி வந்தனர்.



**“நீங்கள் ஏன் திரும்பி வந்தீர்கள்?”**

முஸ்லிம்கள் வெளியேற்றப்பட முன்பு தமிழ்க் கலாசாரத்தின் சில அம்சங்கள் முஸ்லிம் சமுதாயத்தினரின் வாழ்வுடன் கலந்திருந்தன. வெளியேற்றப்பட முன்னர் யாழ்ப்பாணத்தில் திருமணம் முடித்திருந்த சில முஸ்லிம் பெண்கள் தங்களின் திருமணத்தின் போது தாங்கள் தாலி கட்டிக்கொண்டதை நினைவுகூர்ந்தனர். இப்பெண்கள் தமது நாளாந்த ஆடையாகச் சேலைகளை அணிந்து வந்ததுடன் தாவணியினைத் தங்கள் தோள்களில் போடுவதை வழமையாகக் கொண்டிருந்தனர். புத்தளத்திற்கு இவர்கள் செல்லவேண்டியேற்பட்டபோதே அங்கு வாழ்ந்த முஸ்லிம்களின் பழமைவாத சமய நடைமுறைக்கு அமைவாக முகத்தினை மூடும் வழமை இவர்களில் அதிகரித்தது.

2010 ஆம் ஆண்டு இந்த முஸ்லிம் குடும்பங்கள் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிவந்தபோது, யுத்தத்தின் பின்னர் அங்கு ஏற்கனவே குடியேறியிருந்த தமிழ் மக்களில் சிலரின் மத்தியில் இவர்கள் பற்றிய சந்தேகம் காணப்பட்டது. திரும்பி வந்த முஸ்லிம் மக்களிடம் “நீங்கள் ஏன் திரும்பி வந்தீர்கள்” என இளம் தலைமுறையினர் கேட்டனர். இவ்வாறு வினாத்தொடுத்த இளந் தலைமுறையினரில் இந்த முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டமை பற்றி அறிந்திராத பல்வேறு நிர்வாகப் பதவிகளைத் தற்போது வகிக்கும் இளம் அதிகாரிகளும் இருந்தனர். மூத்த தலைமுறையினைச் சேர்ந்த தமிழ் மக்களில் சிலருக்கு குடாநாட்டில் வெளியேற்றப்படலுக்கு முன்னர் முஸ்லிம் மக்கள் வாழ்ந்தமை நன்கு தெரியும். இருப்பினும் ‘தமிழ் மக்களின் காணிகளை எடுப்பதற்காகவே அவர்கள் வந்துள்ளனர்’ என்றே இவர்கள் இன்னும் கூறுகின்றனர்.

***“நாளாந்த வாழ்வில், யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான உறவுகளும் இடையீடுகளும் நட்புமிக்கவையாகவே உள்ளன. எவ்வாறாயினும் ஒரு சிறு பிரச்சினை ஏற்பட்டாலும் ஒரு சமுதாயமாக முஸ்லிம்கள் மீதே குற்றம் சுமத்தப்படுகின்றது.”***

அண்மைக் காலங்களில் இவ்வாறான பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஏப்ரில் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்த பின்னர் “எல்லா முஸ்லிம்களும் ஒன்றுதான்” என்று தமிழ் மக்கள் கூறுவதைக் கேட்கக்கூடியதாக இருந்தது. வன்முறைக்குக் காரணமான தற்கொலைக் குண்டுதாரிகளை சாதாரண முஸ்லிம்களுடன் சமப்படுத்தி இவ்வாறு கதைகள் கூறப்பட்டன. சில தமிழ் மக்கள் முஸ்லிம்களை ஐஎஸ்ஐஎஸ் என்று அழைத்ததுடன் தமிழ் வைத்தியர்கள் கூடத் தமது முஸ்லிம் நோயாளர்களை இவ்வாறு அழைத்தமையினைக் காணக்கூடியதாக இருந்தது. அபாயா மற்றும் நிகாப் ஆகியவற்றினை அணிவதைத் தடைசெய்யும் ஒழுங்குவிதிகள் அமுல்படுத்தப்பட்டபோது தமது தேவைகளுக்காக வெளியே வராது முஸ்லிம் பெண்கள் வீடுகளுக்குள் முடங்கியிருந்தனர். அச்சம் காரணமாகவும்

நிச்சயமற்றதன்மை காரணமாகவும் பல பெண்கள் அன்றிலிருந்து இவற்றை அணிவதை நிறுத்திவிட்டனர்.

## திரும்பி வருதலுக்கான உயர் விலை

திரும்பி வருவது எனப் பல குடும்பங்கள் எடுத்த முடிவின் காரணமாக, அச்சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிவர முடியாமல் இருந்த அல்லது திரும்பி வரும் தீர்மானத்தினை எடுக்க முடியாதிருந்த தமது அன்புக்குரியவர்களையும் உறவினர்களையும் விட்டுப் பிரியும் நிலைக்கு முகங்கொடுத்தன. பல குடும்பங்களைப் பொறுத்த அளவில் திரும்புவதில்லை என்ற இவ்வாறான தீர்மானம் அவர்கள் இனிமேலும் ஒருபோதும் திரும்பமாட்டார்கள் என்பதைக் குறிக்கவில்லை - சிலர் யாழ்ப்பாணத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காகக் காத்திருக்கின்றனர் - அதாவது இடப்பெயர்வின் இன்னொரு நிலைக்கு மீண்டும் செல்லாமல் வீடுகளும் வாய்ப்புக்களும் வழங்கப்படும் வாக்குறுதி அவர்களுக்கு வழங்கப்படும் வரை.

***"திரும்பி வருதல் என்பது ஓர் இலகுவான செயன்முறையாகவும் இருக்கவில்லை அல்லது ஓர் எளிமையான செயன்முறையாகவும் இருக்கவில்லை. திரும்பி வந்த எங்களில் பலர் இன்னும் இடைமாற்ற நிலையிலேயே இருக்கின்றோம்."***

வீடொன்றினைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையினையும் அது கடினமானதாக்கியுள்ளது. அருகாமையிலேயே குடும்பம் வசிக்கவேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அதாவது காணியில் கட்டப்பட்ட குடிசையில் வசித்தல் அல்லது கட்டி முடிக்கப்படும் வரை வாடகை வீட்டில் வசித்தல். இளம் பிள்ளைகளுடன் திரும்பிவரும் குடும்பங்களுக்கு இது குறிப்பாகக் கடினமானதாகும். அதிகாரிகள் வருகையில் நீங்கள் வெளியே சென்றுள்ளீர்கள் என அவர்கள் அறிந்துகொண்டால், அதாவது அர்கள் வந்தபோது நீங்கள் மளிகைக் கடைக்குச் சென்றிருந்தாலும் கூட, நீங்கள் வெளியேறிவிட்டதாகவே அவர்களால் அறிக்கையிடப்படுவீர்கள். எனவே உங்களுக்காக வீடொன்றினைக் கட்டும் செயன்முறை அப்போது நிறுத்தப்படும்.

இப்போது, குடும்ப உறுப்பினர் ஒருவரோ, உறவினரோ அல்லது நண்பரோ இறந்துவிட்டால் அவரின் அன்புக்குரியவர்களினால் ஈமச்சடங்கினில் கலந்துகொள்ள முடியாது. ஏனெனில் பயணம் நீண்டதாக இருக்கின்றது என்பதுடன் பயணமும் கிடைக்கும் போக்குவரத்திலேயே தங்கியுள்ளது. இறந்தவர்களை 24 மணித்தியாலங்களில் அடக்கம் செய்வது முஸ்லிம்களின் வழமை என்கின்ற காரணத்தினால் பல குடும்ப உறுப்பினர்கள் தாமதமாக வந்து இறுதிச் சடங்கினில் கலந்துகொள்ள முடியாமற் போனமை பற்றிப் பல பெண்கள் குறிப்பிட்டனர். தாம் இடம்பெயர்ந்து வாழும் இடங்களில் இருந்து குடும்ப உறுப்பினர்கள் ஒருவர் மற்றவரைச் சந்திப்பதற்காகவோ அல்லது மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காகவோ அல்லது திருமணத்தில்

கலந்துகொள்ளவோ அல்லது சமயத் திருவிழாவிற்கோ யாழ்ப்பாணத்திற்கு வருவதற்குக் கணிசமான செலவு ஏற்படுகின்றது.

**தொழில்வாய்ப்புத் தொடர்பான பிரச்சினைகள்**

முஸ்லிம்கள் புத்தளத்திற்கு இடம்பெயர்ந்தபோது தொழில்வாய்ப்பு என்பது பலருக்கும் சவாலாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் ஒருவர் முச்சக்கரவண்டிச் சாரதியாகப் பணியாற்றியிருந்தால் புத்தளத்திலுள்ள முச்சக்கரவண்டிச் சாரதிகள் அவர்களை அதே தொழிலைச் செய்ய அனுமதிக்க மாட்டார்கள். இடம்பெயர்ந்த பல முஸ்லிம் ஆண்களும் பெண்களும் இதனால் அற்பக் கூலிக்காக கூலித் தொழிலாளர்களாக வேலை செய்யும் நிலையேற்பட்டது. சில சந்தர்ப்பங்களில் வாரமொன்றிற்கு 600 ரூபா மட்டுமே ஈட்டும் நிலையும் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிவரும் முஸ்லிம்களுக்குத் தொழில்வாய்ப்பு என்பது கடினமானதாக இருந்து வருகின்றது. அதிகமான ஆண்கள் பழைய இரும்பினையும் பிளாஸ்திக் பொருட்களையும் ஏனைய பொருட்களையும் சேகரித்தும் சேர்த்தும் பிழைப்பு நடத்திவருகின்றனர். இவர்கள் இவற்றினை மீள்சுழற்சிக்காக எடுத்துச் செல்கின்றனர் அல்லது கொழும்பிலுள்ள கடைகளில் அல்லது தொழிற்சாலைகளில் விற்றுவருகின்றனர். இத்தொழில் மிகவும் நிலையற்றதாகும் என்பதுடன் அற்ப வருமானத்தினையே ஈட்டிக் கொடுக்கின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்காக முஸ்லிம் ஆண்கள் தமிழ்ப் பிரதேசங்களைக் கடந்து செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

**இடப்பெயர்வினை நினைவுகூர்தல்**

இடம்பெயர்ந்தபோது தாம் வாழ்ந்த பிரதேசத்தில் தம்முடன் வாழ்ந்த மக்கள் தம்மை நன்கு நடத்தியதைப் பெண்கள் நினைவுகூர்ந்தனர். ஒரு பெண் தனது இடப்பெயர்வு அனுபவத்தினைப் பகிர்கையில், தான் யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரிக்கு லொறியில் சென்று அங்கிருந்து நாச்சிக்குடாவிற்குப் படகில் சென்று அங்கே இரவினைக் கோயில் ஒன்றில் கழித்ததை நினைவுபடுத்தினார்.

1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் யாழ்ப்பாண முஸ்லிம்கள் நிதி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் செழிப்பாக இருந்ததை இவர்கள் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும், வெளியேற்றப்பட்ட அன்றைய தினம், தமக்குச் சொந்தமான அனைத்தையும் விட்டுச் செல்லுமாறு குடும்பங்களுக்குக் கட்டளையிடப்பட்டது. பெறுமதியானவை அனைத்தையும் விடுதலைப் புலிகள் எடுத்துக்கொண்டதுடன் தமது உடைகளிலும் உடலிலும் மக்கள் மறைத்து எடுத்துச் சென்ற பொருட்களையும் பறித்தெடுப்பதற்காக அவர்களை நன்கு சோதனை செய்தே செல்ல அனுமதித்தனர். இம்மக்கள் விட்டுச் சென்ற உடைமைகளுக்காகவும் சொத்துக்களுக்காகவும் இதுவரையில் நட்டஈடு என்ற வகையில் எதுவும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்திற்கு வெளியே வாழ்ந்த முஸ்லிம்களுடன் இந்தக் குடும்பங்கள் எவ்வித உறவினையும் கொண்டிருக்கவில்லை. வியாபாரங்களுக்காக ஏனைய நகரங்களுக்கு முன்னர் விஜயம் செய்தவர்கள் மாத்திரமே தொடர்புகளைக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்த வெளியேற்றப்பட்ட பின்னர் தங்குவதற்கு இடம் தேடியபோது, தற்காலிகமாகவேனும் தங்குவதற்கு இத்தொடர்புகள் இவர்களுக்கு நன்கு உதவின.

புத்தளத்தினை அடைந்த மக்கள் பாடசாலைகளில் தங்கினர். பள்ளிவாயல்கள் இம்மக்களுக்கு இலவசமாக உணவு வழங்கின. அநுராதபுரத்திற்குச் சென்றவர்களுக்கு தெற்கின் உட்பகுதிகளுக்குச் சென்றவர்களுடன் தொடர்புகளைப் பேணக்கூடியதாக இருந்தது.

இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலும் பள்ளிவாயல்களிலும் தங்கியிருந்தவேளை தூங்குவதும் கழுவுவதும் கழிப்பறைக்குச் செல்வதும் என அனைத்தையும் ஒரே சூழலிலேயே நிறைவேற்றவேண்டியிருந்தது. தமது குடும்ப உறுப்பினர்கள் அல்லாத ஆண்களுடன் சேர்ந்து இந்த வசதிகளைப் பயன்படுத்துவது பெண்களுக்குப் பழக்கமற்றதாக இருந்ததுடன் அவர்கள் இதற்குத் தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு தடவை, 40 குடும்பங்கள் ஒரு காணியில் தங்கியிருந்தன. இவர்களுக்கென நான்கு கழிப்பறைகளும் இரண்டு கிணறுகளுமே இருந்தன. தமது இறுதிச் சேரிடத்திற்கு மக்கள் நகரும்போது புதிய நகரங்களில் வீடுகளைக் கட்டிக்கொள்ள குடும்பங்கள் ஒன்று மற்றொன்றிற்கு உதவிசெய்துகொண்டன.

உள்ளூர் மக்கள் பேசிக்கொள்கையில் "அவர்கள் இடம்பேயர்ந்தவர்கள்" எனக் குறிப்பிடுவது இம்மக்களுக்கு இடப்பெயர்வினைத் தொடர்ச்சியாக ஞாபகப்படுத்தி வருகின்றது.

## எதிர்காலம் பற்றிய சிந்தனை

வெளியேற்றப்பட முன்னர் முஸ்லிம் பிரதேசத்தில் ஐந்து பாடசாலைகள் இயங்கிவந்தன. ஆனால் ஒஸ்மானியா கல்லூரியும் கதீஜா பாடசாலையுமே மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒஸ்மானியா கல்லூரியில் உயர் தரம் வரையிலான வகுப்புக்கள் கடந்த ஒரு வருடமாக நடத்தப்பட்டு வருகின்றன. கதீஜா பாடசாலையில் சாதாரண தரம் வரையிலேயே வகுப்புக்கள் உள்ளன. மாணவர்கள் உயர் தரத்திற்குச் செல்வதற்கு தமிழ் பாடசாலைகளுக்கு மாறவேண்டியுள்ளது.

சில பெற்றோர்கள் டியூசன் வகுப்புக்களுக்காக மேலதிக பணத்தினைச் செலவழிக்க விரும்பாதவர்களாக இருக்கின்றனர் அல்லது தம் வீடுகளுக்கு அருகாமையில் இல்லாத வகுப்புக்களுக்குப் பிள்ளைகளைச் செல்ல அனுமதிக்காதவர்களாக இருக்கின்றனர். இதனால் முஸ்லிம் சிறுவர்கள் வேலைக்குச் செல்கின்றனர். மேலும் பல இளஞ்சிறார்கள் போதைப் பொருளுடன் தொடர்புகளை உருவாக்கிக்கொள்கின்றனர்.

தற்காலத்தில் முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள் பற்றிப் பெண்கள் பேசுகின்றனர். ஒரு பொது முகத்தினைக் கொண்டிருக்க வேண்டிய தேவையினை ஏற்படுத்தும் அதிகாரத்தினைக் கொண்டிருக்கும் பதவியினைப் பெண்கள் வகிக்கக்கூடாது அல்லது பெண்கள் அதிகம் படிக்கக்கூடாது என சமுதாயத் தலைவர்களும் சமயத் தலைவர்களும் போதனை செய்து வருகின்றனர்.

வெளியேற்றலைப் பற்றியும் அதன் சிக்கல்களைப் பற்றியும் கலந்துரையாடுவதற்காகப் புலமையாளர்களாலும் எழுத்தாளர்களாலும் கல்வியியலாளர்களாலும் கூட்டப்படும் மக்கள் மன்றங்களில் சமுதாய மக்கள் கலந்துகொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றனர். எவ்வாறாயினும் தங்கள் கிராமங்களில் தங்களைச் சுற்றி வாழ்பவர்களுடன் இதே வகையான தலைப்பினைப் பேச முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

***"வெளியேற்றத்தினை அனுபவிக்காத தலைமுறையினைச் சேர்ந்த இளஞ் சிறுவர்கள் சமுதாயத்தின் வரலாறு பற்றி அக்கறையற்றவர்களாக இருப்பதுடன் மூத்தோராகிய எம்மிடம் அதுபற்றிக் கேட்காதவர்களாகவும் இருக்கின்றனர். சமுதாயம் இடம்பெயர்ந்து சென்ற தெற்கிலேயே இவர்களில் அதிகமானவர்கள் பிறந்திருக்கின்றனர். எனவே இவர்கள் வடக்குடன் எத்தொடர்பினையும் உணராதவர்களாக இருக்கின்றனர்."***

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாக்களிப்பதற்கே சமுதாயம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. தேர்தல்கள் நெருங்குகையில், ஏற்கனவே ஊருக்குத் திரும்பி வந்த நபர்கள் வேறு இடங்களில் வாழும் தங்களின் குடும்பங்களையும் நண்பர்களையும் தொடர்புகொண்டு வாக்களிக்க ஊருக்கு வருமாறு அழைக்கின்றனர். இவ்வாறு வருவதற்கு எல்லோராலும் முடிவதுமில்லை அல்லது எல்லோரும் அவ்வாறு வரத் தீர்மானிப்பதுமில்லை.

வெளியேற்றப்பட்டு 30 வருடங்கள் கடந்துவிட்டன. தாங்கள் இடம்பெயர்ந்ததிலிருந்து வாழ்ந்து வந்த இடங்களிலேயே மக்கள் பலரும் காணிகளை வாங்கியுள்ளனர். யாழ்ப்பாணத்திற்குத் திரும்புவது என்பது இம்மக்களைப் பொறுத்த அளவில் அவர்களின் வாழ்வினை மீண்டும் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிப்பதைக் குறிக்கும். இதற்கு அரசாங்கத்தின் எந்த உதவியும் கிடைப்பதற்கான சாத்தியமும் அரிதானதாகும்.




## முல்லைத்தீவு

வட மாகாணத்தில் இருந்து 1990 இல் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுள் முல்லைத்தீவில் இருந்து வெளியேற்றப்பட்ட 1000 முஸ்லிம் குடும்பங்களும் அடங்குகின்றன. காலப்போக்கில் இந்த எண்ணிக்கை 5000 குடும்பங்களாக அதிகரித்துள்ளதுடன் புதிய தலைமுறையினர் சமுதாயத்தில் சேர்ந்துள்ளனர்.

திரும்பிவந்து தங்களின் தாய் மண்ணில் குடியேறிய மக்களுக்கு இடவசதி, வீடமைப்பு மற்றும் நீர் ஆகியவை தொடர்ந்தும் பிரச்சினைக்குரிய விடயங்களாக இருந்து வருகின்றன. இக்காரணத்தினால் பல குடும்பங்கள் புத்தளத்திலும் தாம் இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் வேறு இடங்களிலும் தொடர்ந்து வாழ்வது எனத் தீர்மானித்துள்ளனர். முல்லைத்தீவில் பதிவுசெய்துள்ள 2000 முஸ்லிம் குடும்பங்களில் அரைவாசியினர் மாத்திரமே அந்த மாவட்டத்தில் இன்னும் வாழ்ந்து வருகின்றனர்.

***“திரும்பிச் செல்வதில்லை என ஏனையோர் எடுத்த தீர்மானத்திற்கான காரணம் இடம்பெயர்ந்து இரண்டு தசாப்தங்களின் பின்னர் இவர்கள் புத்தளத்திலும் ஏனைய இடங்களிலும் ஆழமான உறவுகளை ஏற்படுத்தி***

***வாழ்க்கையில் நிலைபெற்றுவிட்டமையாகும். முல்லைத்தீவில் இருந்து வெளியேறியவர்கள் புத்தளத்தில் திருமணம் முடித்து குடும்பங்களாகப் பெருகி அங்கேயே தொழில்களையும் வியாபாரங்களையும் செய்து வாழ்ந்து வருகின்றனர்.”***

முல்லைத்தீவில் தற்போது வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் தமது சொந்த இடம் எனக் கூறக்கூடிய இடத்திற்குத் திரும்பியதையிட்டு மகிழ்ச்சியாக உள்ளனர். ஒரு குடும்பத்தின் சகல கிளையினரும் திரும்பி வந்துள்ள சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அதாவது உறவினர்கள் அனைவரும் ஒன்றாக வாழ்கின்றனர். வெளியேற்றப்பட முன்னர் அதிகமான மக்கள் ஓலை வீடுகளில் எவ்வாறு வாழ்ந்து வந்தனர் என்பதைப் பெண்கள் நினைவுகூர்ந்தனர். இப்போது வீடமைப்புத் திட்டம் மூலமாகவும் அல்லது குடும்பத்தின் செலவின் காரணமாகவும் பல குடும்பங்கள் தற்போது நவீன வீடுகளில் வாழ்ந்து வருகின்றன. தனிப்பட்ட கொடையாளர்கள் மூலம் இவர்கள் கிணறுகளையும் விவசாயத்திற்காகக் குழாய்க் கிணறுகளையும் அமைத்துள்ளனர்.

தொழில்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தினை எதிர்நோக்குதல் போன்ற பல பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களின் பொருளாதார நிலைமைகள் மிகக் கடினமானவையாக இருக்கின்றன. தமது குடும்பங்களுக்கு உதவுவதற்கான ஒரே வழியாகப் பலர் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் சென்றுள்ளனர். ஆனால் கடந்த ஏப்ரலில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இதுவும் தெரிவுசெய்ய முடியாத ஒன்றாக மாறியுள்ளது.

## ஒரு புதிய போராட்டத்திற்குத் திரும்புதல்

முல்லைத்தீவிற்குத் திரும்பி வருபவர்கள் எதிர்நோக்கும் பிரதான சவால்களுள் ஒன்று இம்மக்கள் தங்களின் காணிகளையும் வீடுகளையும் திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்துடனும் நிர்வாக உத்தியோகத்தர்களுடனும் மேற்கொள்ளும் இடையீடாகும். முஸ்லிம்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவுசெய்வதற்குத் தமிழ் கிராமசேவை உத்தியோகத்தர்கள் விரும்புவதில்லை எனப் பெண்கள் குறிப்பிட்டனர். மக்கள் உண்மையாகவே வீடுகளில் வாழ்கின்றனரா என்பதைப் பரிசோதிப்பதற்காக அவர்கள் அடிக்கடி வீட்டுக்கு வீடு செல்கின்றனர். வீடுகளில் வசிப்பவர்கள் அண்மையில் உணவு சமைத்துள்ளனரா என்பதைக் கண்டறிய அதிகாரிகள் அடுப்பின் சூட்டையும் விறகுச் சூட்டையும் சில சந்தர்ப்பங்களில் பரிசோதித்துள்ளதாகவும் பெண்கள் குறிப்பிட்டனர்.

யாருக்காவது கிராமசேவை உத்தியோகத்தரின் கடிதம் அல்லது சான்றிதழ் தேவைப்பட்டால் இந்த ஆவணங்களை இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு புத்தள அதிகாரிகள் விநியோகிக்காத காரணத்தினால் இம்மக்கள் அவற்றினைப் பெற்றுக்கொள்ள முல்லைத்தீவுக்குச் செல்லவேண்டியுள்ளது. இவ்வாறு நீண்ட

பயணம் சென்று முல்லைத்தீவில் வாக்களிக்காது முல்லைத்தீவில் தேர்தலில் நின்றவர்களுக்குப் புத்தளத்தில் வாக்களிப்பதற்காகக் கடந்த ஆகஸ்ட் 2020 பொதுத் தேர்தலின்போது தற்காலிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பலரும் தங்களின் வாக்குப் பதிவினைப் புத்தளத்திற்கு மாற்ற விரும்பாதவர்களாக இருக்கின்றனர்.

பல குடும்பங்கள் தங்களின் வீடுகளில் இருந்து சில கிலோ மீற்றர்கள் தூரத்தில் விவசாயக் காணிகளைக் கொண்டிருந்தனர். இவற்றிற்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களைக் கொண்டிருந்தனர்(LDO). இம்மக்கள் திரும்பிவந்தபோது மீண்டும் பயிர்ச்செய்கையினைத் தொடங்குவதற்காகத் தமது அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்க பிரதேச செயலாளரை அணுகினர். எவ்வாறாயினும் அதிகாரிகள் மக்களை மீண்டும் மீண்டும் கேள்விக்குட்படுத்தியும் பரிசோதனைக்குட்படுத்தியும் வருவதால் இச்செயன்முறை இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. சில குடும்பங்கள் அவற்றின் விண்ணப்பங்களை அனுப்பி ஏழு வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னும் தங்களின் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படுவதற்காகக் காத்திருக்கின்றன.

ஏனைய சில சம்பவங்களில் இந்த விவசாயக் காணிகள் கலப்பு அனுமதிப் பத்திரங்களின் கீழ் அல்லது கலப்பு உரித்தாண்மையின் கீழ் இருந்திருக்கின்றன. இம்மக்கள் திரும்பி வந்தபோது அவர்களின் காணிகள் இப்போது காட்டுக் காணியாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குடியேற முடியாது என்றும் அவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது. இந்தக் காணிகளில் வாழ்ந்து அவற்றினைப் பயன்படுத்திவரும் தமிழ் மக்களுக்கு இதே விதி பிரயோகிக்கப்படுவது போல் தென்படவில்லை. பிரதேச செயலக அதிகாரிகள்தான் வனத் திணைக்கள அதிகாரிகளை அக்காணிகளைக் காட்டுக் காணியென ஒதுக்கி அதில் கல் அடையாளமிடுமாறு அழுத்தம் வழங்கினர் என்பதைச் சமுதாயத்தினர் இறுதியில் கண்டுபிடித்துள்ளனர். இதனால் சமுதாயத்தினர் அவர்களின் சொந்தக் காணிகளைக் கோருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

***“இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தாண்டி நாம் திரும்பி வந்துள்ளோம். முல்லைத்தீவில் எமது சொந்தக் காணியெனக் கூற எமக்குக் காணி உண்டு. நாம் இடம்பெயர்ந்து சென்ற இடங்களில் நாம் காணிகளை வாங்கவுமில்லை அல்லது குத்தகைக்கு எடுக்கவுமில்லை அல்லது அதற்கு எமக்கு வழியிருக்கவுமில்லை. நாம் எமது இடத்திற்குத் திரும்பியுள்ளோம். திரும்பி வருவது எமது உரிமை.”***

அவர்களின் குடும்பங்களின் பகுதியினர் இன்னும் வட மாகாணத்திற்கு வெளியேயுள்ள பிரதேசங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். இயல்பிலேயே, திருமணங்களுக்குச் செல்லவும் ஒருவர் நோயுற்ற சந்தர்ப்பங்களில் உதவி வழங்குவதற்கும் இவர்கள் ஒருவர் மற்றவரைச் சந்திக்கச் செல்ல விரும்புகின்றனர். ஆனால் இதற்காகும் செலவு பொதுவாக உயர்வானதாகக் காணப்படுகின்றது.

நீடித்த இடப்பெயர்விற்கான உத்தேச செயலகத்தினைச் சேர்ந்த ஆணையாளர்களைத் தாம் சந்தித்துக் கலந்துரையாடியதை 2012 இல் திரும்பிவந்த பெண்கள் நினைவுபடுத்தினர். இந்த அலுவலகத்தின் முதல் முன்னுரிமைக்குரியவர்களாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் காணப்பட்டனர். எவ்வாறாயினும் 2019 இல் அமைச்சரவை மாற்றமடைந்ததும் வீடுகளையும் வீட்டுத் திட்டங்களையும் நிர்மாணிப்பதற்கான கொடுப்பனவுகள் தாமாகவே நின்றுவிட்டன. திரும்பி வந்த எந்தவொரு முஸ்லிம் குடும்பத்திற்கும் வீடமைப்பினை வழங்குவதற்கென 792,000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டது. ஆனால் அற்றை வரை 200000 ரூபா மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. செயலகம் அதன் நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டது. நீடித்த இடப்பெயர்வுக்கான கொள்கை ஒருபோதும் நிறைவேற்றப்படவேயில்லை.

இழப்பீட்டிற்கான அலுவலகத்திடமிருந்து தமக்கோ அல்லது தமக்குத் தெரிந்த பல முஸ்லிம் குடும்பங்களுக்கோ எந்த உதவியும் கிடைக்கவில்லை எனப் பெண்கள் குறிப்பிட்டனர். திரும்பிவந்த அனைத்துக் குடும்பங்களும் தாம் இழந்த சொத்துக்களை ஈடுசெய்வதற்காக நட்டஈட்டிற்கு விண்ணப்பித்தன. ஆனால் எதுவும் கிடைக்கவில்லை.

முல்லைத்தீவில் தற்போது கிடைக்கக்கூடியதாகவுள்ள காணிகள் கடந்த 30 வருடங்களில் அதிகரித்த முஸ்லிம் சமுதாயத்தின் ஜனத்தொகைக்குப் போதாததாக இருக்கின்றது. இவர்கள் 2012 இல் வடக்கிற்குத் திரும்பியதில் இருந்து முஸ்லிம்கள் காணிக் கச்சேரியின் முன்னர் பல தடவைகள் சென்றிருக்கின்றனர். இச்செயன்முறையில் முஸ்லிம்களின் பங்கேற்பினைத் தமிழ் மக்கள் எதிர்த்திருந்தனர்.

இதனால் எத்தீர்வினையும் பெற்றுக்கொள்ளாத முஸ்லிம்கள் தங்களின் காணிகளில் சென்று வாழ்ந்து பயிர்செய்வதற்காக அவற்றினைத் துப்பரவு செய்யச் சென்றனர். இதற்கு எதிராக இரண்டு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டதாகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டதாகவும் பெண்கள் குறிப்பிட்டனர். முல்லைத்தீவு தமிழ் மக்களுக்கு மட்டுமே சொந்தமானது என்பதே ஆர்ப்பாட்டக்காரர்களின் வாதமாக இருந்தது. மேலும், பதுங்கு குழிகளை நிர்மாணிக்கையில் பயன்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளினால் தேக்கு மரங்கள் நடப்பட்ட பிரதேசத்திற்கு அருகில் முஸ்லிம்களைக் குடியேற அனுமதிக்கவேண்டாம் என அவர்கள் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்தனர். இற்றை வரை புத்தளத்தில் இருந்து மக்கள் காணிக் கச்சேரிக்காக வந்து தங்கள் காணிகளை மீண்டும் கோருகின்றனர். ஏனெனில் இந்த விடயம் தொடர்பாக பலருக்கும் தீர்வு இல்லாமலே இருக்கின்றது.

முல்லைத்தீவிற்குத் திரும்பி கிட்டத்தட்ட ஒரு தசாப்தம் கடந்த பின்னர் 25 பேருக்கு அரசாங்கக் காணிகள் வழங்கப்பட்டன. 1990 இன் முன்னர் 80 பேர்ச்

நிலத்துடனும் பெரிய தோட்டங்களைக் கொண்ட வீடுகளுடனும் வாழ்ந்த குடும்பங்கள் இருந்தன. இப்போது ஆறு குடும்பங்கள் இதே அளவு காணியினைப் பகிர்ந்து வாழ்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தமிழ் மக்களுக்கு அரை ஏக்கர் காணி வழங்கப்பட்டிருக்கையில் முஸ்லிம்களுக்கு ஒரு வீட்டிற்கு ஏழு பேர்ச் காணி வழங்கப்பட்டிருப்பதை முஸ்லிம்கள் குறிப்பிட்டனர்.

யுத்தம் முடிவடைந்த உடனே 2010 ஆம் ஆண்டே பல முஸ்லிம்கள் தங்கள் காணிகளைக் கோர பிரதேசத்திற்கு மீண்டும் வந்திருக்கின்றனர். பதிவுகள் மேற்கொள்ளப்பட்டபோது மெனிக் பாம் அகதி முகாமில் இருந்து திரும்பி வந்த தமிழ்க் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இவர்கள் அனைவரும் குடியேற்றப்பட்டு அகதி முகாம் மூடப்பட்ட பின்னரே திரும்பி வருவதற்கான பதிவுகளை மேற்கொள்ள முஸ்லிம்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. அவர்கள் திரும்பி வந்த நேரத்தில் அனைத்தையும் அவர்களே ஏற்பாடு செய்துகொண்டனர். இவர்களுக்கு ஆறு மாதங்களுக்கு உலர் உணவு வழங்கப்பட்டமை மாத்திரமே அரசாங்கத்திடம் இருந்து இவர்களுக்குக் கிடைத்த ஒரே உதவியாகும்.

2010 இல் திரும்பி வந்த பெண் ஒருவர் குறிப்பிடுகையில், நலன்விரும்பிகளின் நிதியுதவியுடன் தான் ஒரு காணியினை வாங்கும்வரை ஏனையோரின் காணிகளில் ஓலைக் குடிசைகளைக் கட்டி பத்து இடங்களுக்கு மாறிவிட்டதாகக் குறிப்பிட்டார். மற்றொருவர் குறிப்பிடுகையில் ஒரு காணித் துண்டினை வாங்குவதற்குத் தான் தனது சகல நகைகளையும் அடகு வைத்ததாகக் குறிப்பிட்டார்.

## வெளியேற்றல் பற்றிய நினைவுகள்

வெளியேற்றலுக்கு முன்னைய மாதங்களில், சமுதாயம் நிச்சயமற்ற தன்மையினை உணர்ந்தது. பல குடும்பங்கள் அவற்றின் பெறுமதிமிக்க ஆவணங்கள் அனைத்தையும் ஒரு பெட்டியில் வைத்துத் தேவையேற்படின் வெளியேறத் தயாராக இருந்தன. தயார்படுத்தாத ஏனையோர் புறப்படும் அவசரத்தில் தங்கள் ஆவணங்களையும் சான்றிதழ்களையும் தொலைத்துவிட்டனர்.
வடக்கில் இருந்து கால்நடையாகப் புறப்பட்டுச் செல்கையில் வழியில் பிள்ளைகள் பிறந்ததையும் தங்கள் தாய்மார்கள் தங்களைக் காடுகளில் பிரசவித்ததையும் பெண்கள் நினைவுகூர்ந்தனர். இந்த நீண்ட பயணங்களில் தமிழ் வீடுகளில் குடிப்பதற்கு இவர்கள் நீர் கேட்டிருக்கின்றனர். ஆனால் சில இடங்களில் நீர் மறுக்கப்பட்ட நிகழ்வுகளும் நடந்திருக்கின்றன.

***“வட மாகாணத்தின் எல்லை வரை விடுதலைப் புலிகள் காவலுக்கு நின்று நாம் பெறுமதிவாய்ந்த எவற்றையும் எங்களுடன் எடுத்துச் செல்லவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டனர். எமது கிராமத்துப்***

*பெண் ஒருவர் அவரின் நகைகளைத் தனது ஆடை மடிப்பினில் வைத்துத் தைத்து எடுத்துச் செல்ல முயற்சித்திருந்தார். ஆனால் எங்களை நன்கு பரிசோதித்த அவர்கள் அப்பெண்ணிடமிருந்த அனைத்து நகைகளையும் எடுத்துவிட்டனர்.”*

வவுனியாவுக்கு அப்பால் கிராம்ங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தொகுதியினருக்கு உதவ முன்வந்தனர். செல்லும் வழியில் பல்வேறு முகாம்களுக்கு இவர்களை அழைத்துச் செல்ல இலங்கை இராணுவம் இலவசமாக லொறிகளை ஏற்பாடு செய்திருந்தது. எவ்வாறாயினும் லொறிச் சாரதிகள் இடம்பெயர்ந்த மக்களிடமிருந்து பணம் கேட்டிருக்கின்றனர்.

முஸ்லிம்கள் திரும்பியதில் இருந்தான காலப்பகுதியில் தங்களின் வெளியேற்றலை நினைவுகூற எந்த ஒரு கூட்டு நினைவுகூறலையும் ஒக்டோபர் 30 இல் நடத்தவில்லை. இவ்வாறான நிகழ்வு வடக்கில் முஸ்லிம்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நிலவும் உறவினைப் பாதித்து தேவையற்ற பிரச்சினையினை உருவாக்கும் என்ற அச்சத்தினால் எந்தவொரு நினைவுகூறல் நிகழ்வினையும் ஏற்பாடு செய்யும் பொறுப்பினை ஏற்க யாரும் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.



2002 ஆம் ஆண்டில் யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டபோது தங்களின் காணிகளுக்கு முஸ்லிம்கள் திரும்பி வரலாம் என்ற ஓர் உடன்பாடு எட்டப்பட்டது. பல குடும்பங்கள் திரும்பிச் சென்றபோது அங்கே விடுதலைப் புலிகளின் அனுமதியுடன் தமிழ் மக்கள் தங்களின் வீடுகளில் வாழ்வதை இம்மக்கள் கண்டனர். எல்டிடிஈ போராளிகளும் அதிகாரிகளும் அவர்களின் குடும்பத்தினரும் கூட முஸ்லிம்களின் வீடுகளில் வசித்துவந்தனர்

2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடைபெற்றதைத் தொடர்ந்து புத்தளத்தினைச் சேர்ந்தவர்கள் முல்லைத்தீவில் உள்ள உறவினர்களுடன் தங்கி வாழ வரமுடியாது மேலும் மாவட்டத்தில் வாழ்வதற்காகப் பதிவுசெய்ய முடியாது எனும் நிலையே காணப்படுகின்றது. திரும்பி வந்த பலரின் தேசிய அடையாள அட்டைகள் புத்தள முகவரியினைக் கொண்டிருந்த காரணத்தினால் அதனை மாற்றுமாறு இராணுவத்தினர் அவர்களைக் கோரினர். இப்புதிய தேசிய அடையாள அட்டைக்காகப் புகைப்படம் எடுக்கப் புகைப்பட ஸ்டூடியோவின் முன் சனக்கூட்டம் நின்றதைச் சில பெண்கள் நினைவுபடுத்தினர்.

2012 இல் முஸ்லிம் சமுதாயம் திரும்பிவந்தபோது அவர்களை இராணுவம் பரிசோதிக்காத அதேவேளை குண்டுவெடிப்பின் பின்னர் கடுமையான கண்காணிப்பு ஆரம்பிக்கப்பட்டது. வீடுகள் கிரமமாகப் பரிசோதிக்கப்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் பயணம் செய்வதற்குப் பல குடும்பங்கள் அஞ்சின. குர்ஆன் வைத்திருந்தமைக்காகப் பலர் கைதுசெய்யப்பட்டனர் - கைது செய்யப்படுவதைத் தவிர்க்கப் பல குடும்பங்கள் தங்கள் வசமிருந்த புனித நூலை எரித்துவிட்டன.

## இணைவும் மீளிணைவும்

தாங்கள் திரும்பி வந்ததைத் தமிழ்ச் சமுதாயம் விரும்பவில்லை எனப் பெண்கள் குறிப்பிட்டனர். அவர்கள் முஸ்லிம்களைப் 'புத்தள ஆட்கள்' எனக் குறிப்பிட்டதுடன் அவர்களைப் பாரத்துப் பேசவோ அல்லது சிரிக்கவோ இல்லை. இது முஸ்லிம்களின் நாளாந்த வாழ்வில் ஒரு பிரச்சினையினையும் உருவாக்காத அதேவேளை இதனை அவர்கள் தங்கள் மனதில் ஒரு சுமையாகச் சுமந்து வந்தனர். இளம் பிள்ளைகள் ஒழிந்திருந்து இக்குடும்பங்களைப் பார்க்கும். இவர்கள் யார் எனத் தங்களின் மூத்தவர்களிடம் கேட்கும். இச்சிறுவர்களுக்கு முஸ்லிம்களைப் பற்றித் தெரியாது அல்லது முஸ்லிம்களைப் பற்றி இப்பிள்ளைகள் முன்னர் ஒருபோதும் கேள்விப்படவில்லை. 'இவர்கள்தான் முஸ்லிம்கள், இவர்கள் இப்படித்தான் உடுப்பார்கள்' என சில பெரியவர்கள் அவர்களுக்கு விளக்குவார்கள்.

காலப்போக்கில் தமிழ் மக்களுடனான சமுதாயத்தின் உறவு முன்னேற்றமடைந்துள்ளது. அவர்களினால் வெளியேற்றலைப் பற்றியும் இடப்பெயர்வு பற்றிய அவர்களின் அனுபவத்தினைப் பற்றியும் பேச

முடிகின்றது. அதிகமான மக்கள் புரிந்துகொள்கின்றனர். விடுதலைப் புலிகளின் வன்முறைகளைக் கண்ணால் கண்டவர்கள் அல்லது அனுபவித்தவர்கள் இம்மக்களின் போராட்டங்கள் பற்றிப் பச்சாதாபப்படுகின்றனர். இவ்வாறான தனிநபர்களுடன் உறவினைக் கட்டியெழுப்புவது இரண்டு சமுதாயங்களுக்கும் இடையில் சில பிணைப்புக்களை உருவாக்க உதவுகின்றது. இயக்கத்தின் மீது இன்னும் அனுதாபம் கொண்டுள்ளவர்களுடன் இப்பிரச்சினைகளை எழுப்புவது இன்னும் கடினமானதாக இருக்கின்றது - அவர்களின் முகத்தில் தோன்றும் வெளிப்பாடுகள் இத்தலைப்பு இன்னும் அணுகப்படக்கூடாத தலைப்பு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது எனப் பெண்கள் கூறுகின்றனர்.

வெளியேற்றப்பட முன்னர் முல்லைத்தீவிழ் வாழ்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்கள் நெருக்கமாக வாழ்ந்து வந்தனர். முஸ்லிம் குடும்பங்கள் விடுதலைப் புலிகளுக்கு உணவு வழங்கிவந்தனர். இயக்கத்தின் அதிகாரிகளுடனும் அவர்களின் குடும்பங்களுடனும் நெருங்கிப் பழகி வந்தனர். உண்மையில் உரிமைகள் பற்றிய விடுதலைப் புலிகளின் பொதுச் சொல்லாடல் எவ்வாறு முஸ்லிம்களையும் ஊக்குவித்தது என்பதைப் பெண்கள் நினைவுகூர்ந்தனர். இரண்டு சமுதாயங்களும் அச்சந்தர்ப்பத்தில் அபிவிருத்தி பற்றியும் பல்கலைக்கழக அனுமதிக்கான கோட்டா முறைமையில் காணப்பட்ட பாகுபாட்டினைப் பற்றியும் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் பங்குபற்றின.

***“யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து நாடு முழுவதும் நல்லிணக்கம் பற்றியும் இடைமாற்ற நீதி பற்றியும் கலந்துரையாடப்பட்டன. எவ்வாறாயினும் இக்கருத்துக்களும் பொறிமுறைகளும் முஸ்லிம் மக்களுக்கெனக் கருதப்படாதவை போல்தான் தென்படுகின்றன.”***



# புத்தளம்

## இடப்பெயர்வின் போது முகங்கொடுத்த சவால்கள்

புத்தளத்திற்குச் செல்லும் வழியில் இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தனர். வெளியேயுள்ள குளியலறைக்குச் செல்கையில் பெண்கள் ஒன்றுசேர்ந்து சென்றுவந்தனர். எண்ணிக்கையில் பாதுகாப்பு உண்டு என எதிர்பார்த்தனர். நொச்சியாகம பாடசாலையில் இருந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் ஒன்றுசேர்ந்து மரத்தின் கீழ் சமைத்துக் குடும்பங்களாகப் பகிர்ந்துண்டனர்.

அவர்கள் புத்தளத்திற்கு முதலில் வந்தபோது மணல்குன்று முகாமில் தாங்கள் கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டதைப் பெண்கள் நினைவுகூர்ந்தனர். அனைத்துக் குடும்பங்களும் ஒன்றாக நெருக்கமாக வாழ்ந்த காரணத்தினால் நெரிசலில் உள்ள ஆண்களிடமிருந்து வந்த தேவையற்ற அவதானத்தினை அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

***"இடப்பெயர்வு பற்றிய எமது அனுபவங்கள் பல போராட்டங்களினால் பின்னப்பட்டிருக்கின்றது. எமது குடும்பத்திற்கு உணவளிக்க உழைப்பதற்காக எம்மால் செய்ய முடிந்த எந்த வேலையினையும் நாம் செய்தோம். புதிய இடத்திற்கு நாம் எம்மைப் பரிச்சயப்படுத்திக்கொண்ட அதேவேளை எமது பிள்ளைகளைக் கண்காணித்துப் பராமரிக்கும் மேலதிகப் பொறுப்பினையும் எங்கள் தோள்களில் சுமந்திருந்தோம்"***

அக்காலகட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிடைத்த ஒரே உதவி உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட மாதாந்தக் கூப்பனான 630 ரூபாவும் 30 கிலோ அரிசியுமாகும். வேறு பொருட்களை வாங்குவதற்காகப் பணத்தினைப் பெறத் தாம் 15 கிலோ அரிசியினை விற்றுவிட்டு எஞ்சியவற்றைக் குடும்பத்தின் உணவுத் தேவைக்குச் சமைத்துவந்ததாகப் பெண்கள் குறிப்பிட்டனர். செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய உதவியும் சிறு ஆதரவும் 1992 வரை தொடர்ந்து பின் ஒரேயடியாக முடிவுக்கு வந்தன.

1990 இற்கு முன்னர் வியாபாரத் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்கள் அவ்வாறு தொடர்பில்லாதவர்களை விடச் சற்று இலகுவாக வடக்கில் இருந்து வந்ததும் குடியமரக்கூடியதாக இருந்தனர். கல்பிட்டியிலும் புத்தளத்திலும் தொடர்புகளைக் கொண்டிருந்த முஸ்லிம் வியாபாரிகளால் தங்களின் குடும்பங்களுக்காகத் தங்குமிடங்களைக் கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்தது.

பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி குழப்பப்பட்டமையே வெளியேற்றப்பட்டதன் மிகப் பெரிய தாக்கங்களில் ஒன்றாக இருக்க முடியும் எனப் புத்தளத்தில் வாழும் பெண்கள் குறிப்பிடுகின்றனர். உதாரணமாக, தங்கள் ஊரான மன்னாரில் 7 ஆம் வகுப்பில் தமிழ்ப் பாடசாலைகளில் கற்ற மாணவர்கள் புத்தளத்தில் சிங்களப் பாடசாலைகளில் 3 ஆம் வகுப்பில் சேரவேண்டிய அவலம் ஏற்பட்டது. மேலும் தாங்கள் வாழ்ந்த இடங்களுக்கு அருகாமையில் பாடசாலைகளைக் கண்டுபிடிப்பதில் ஏற்பட்ட சிரமத்தினால் பல பெண் பிள்ளைகள் பாடசாலையினை விட்டு நேரகாலத்துடன் நின்றுவிட நேர்ந்தது. சில பிள்ளைகள் பாடசாலை செல்ல நான்கு கிலோ மீற்றர்கள் நடந்துசெல்ல வேண்டியிருந்தது.

## வேர்களைக் கைவிடல்

கடந்து சென்ற மூன்று தசாப்தங்களில் ஆரம்பத்தில் புத்தளத்திற்கு வந்த இடம்பெயர்ந்த மக்களில் அனேகமாக எல்லோரும் சொந்தமாகக் காணிகளை வாங்கி பல்வேறு கொடையாளர்கள் வழங்கிய மரத்தினையும் சீமெந்தினையும் கொண்டு தமக்கெனப் புதிய வீடுகளைக் கட்டிக்கொண்டுள்ளனர். இவர்கள் வாங்கிய காணிகள் இருந்ததிலேயே மிக மலிவான காணிகள் என்பதுடன் காட்டிற்கும் ஏரிகளுக்கும் அருகில் அமைந்துள்ளன. இதனால் வீடுகளைக் கட்டி அதனை வாழக்கூடியதாக மாற்றுவதற்கு இவர்கள் கடினமாக உழைக்கவேண்டியிருந்தது.

***"வெளியேற்றப்பட்ட பின்னர் புத்தளத்திற்கு வந்த ஒவ்வொரு குடும்பமும் காலப்போக்கில் புதிய தலைமுறைகளின் பிறப்பினால் இப்போது பத்துக் குடும்பங்களாகப் பெருகியுள்ளன."***

இருப்பினும் இக்குடும்பங்களில் பலவும் இன்னும் ஒரு வீட்டிலேயே வாழ்ந்து வருகின்றன. திரும்பிச் சென்ற சுமார் 2000 குடும்பங்களும் தாமாகவே சகல நிர்மாண வேலைகளையும் செய்துள்ளன. சிலருக்கு இந்திய வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீடுகள் கிடைத்துள்ளன.

தம்மில் பலர் கல்வியினைப் பூர்த்திசெய்யவில்லை என்றும் இளவயதிலேயே திருமணம் முடித்துவிட்டதாகவும் பெண்கள் குறிப்பிட்டனர். இடப்பெயர்வின் அனுபவம் மூலமாக பிள்ளைகளை வளர்க்க இவர்கள் பாடுபட்டு அவர்களுக்குச் சிறந்த கல்வியினை வழங்கியுள்ளனர். புத்தளத்திலுள்ள மக்கள் வடக்கு முஸ்லிம்களை 'அகதிகள்' என்றே குறிப்பிடும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். இம்மக்கள் நகரத்தில் தங்கள் வாழ்வினை நிலைநிறுத்த முயற்சித்தபோதும் இவ்வாறு அழைக்கப்பட்டமை அவர்களுக்குக் காட்டப்பட்ட வித்தியாசத்தினையே சுட்டிக்காட்டுகின்றது. இருப்பினும் இதே முத்திரையினைத் தங்கள் பிள்ளைகளுக்குக் குத்த முடியாது என்றும் ஏனெனில் அவர்கள் வெளியேற்றத்தின் பின்னர் புத்தளத்தில் பிறந்தவர்கள் என்றும் பெண்கள் மகிழ்ச்சியுறுகின்றனர்.

**எதிர்காலம்**

சமுதாயம் எதிர்நோக்கும் தொடர்ச்சியான பிரச்சினை பிரதேசத்தில் வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தினால் இளைஞர்களுக்குத் தொழில் இல்லாமையாகும். 16 வயதேயான இளம் பிள்ளைகள் கூட போதைப் பொருளை நாடிச் செல்கின்றனர். இதற்கு ஒரு காரணம் வேலை இல்லாமை என அவர்களின் தாய்மார்கள் நினைக்கின்றனர் - இளைஞர்களுக்கு வழமையாகச் செய்வதற்கென வேலை இருந்தால் சமுதாயத்தில் போதைப் பொருள் பாவனை குறைவது சாத்தியமானதாகும்.

இப்பெண்களின் சமுதாயத்தில் கல்வி கற்காதவர்கள் கடைகளில் வேலை செய்தல், வடை விற்றல் போன்ற சிறு வேலைகளைச் செய்துவருகின்றனர். பெண்கள் ஆலைகளில் வேலை செய்கின்றனர். பண்ணைகளில் வேலை செய்கின்றனர். கல்பிட்டி செல்லும் வழியிலுள்ள பல உப்பளங்களிலும் வேலை செய்கின்றனர். எவ்வாறாயினும் இதனால் இவர்களுக்கு அற்பமான வருமானமே கிடைக்கின்றது. இவர்கள் வேலை தேடி வெளிநாடு சென்றால் இவர்களின் பிள்ளைகள் தனித்துவிடுவார்கள். எனவே பெண்களுக்கு நீடுறுதியான சுய வேலை வாய்ப்பிற்கான உதவி தேவைப்படுகின்றது எனப் பெண்கள் நினைக்கின்றனர். மனிதர்களின் இரத்தத்தினை உறிஞ்சும் நுண் கடன் திட்டத்தினால் ஏற்கனவே பல பெண்கள் கடன் சுமையால் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளனர். இப்பெண்களின் அற்ப வருமானத்தினைக் கொண்டு இக்கடன்களின் எக்கச்சக்கமான வட்டியினைக் கட்டுவது அசாத்தியமானதாகும்.

## இரண்டு வீடுகள்

புத்தளத்தில் வாழும் வடக்கு முஸ்லிம்கள் திருமணம் போன்ற வைபவங்களுக்காகவும் ஏனைய நிகழ்வுகளுக்காகவும் மன்னாரிலுள்ள தமது குடும்பத்தாரைச் சந்திக்கச் செல்கின்றனர். இவ்வாறு இவர்கள் விஜயம் செய்கையில் இவர்களின் வீடுகள் அங்கே இன்னும் அவ்வாறே இருப்பதைக் காண்கின்றனர். எவ்வாறாயினும் வடக்கிலுள்ள இவர்களின் வீடுகளுக்குத் திரும்புவது என்பது இவர்களைப் பொறுத்த அளவில் வாழ்க்கையினைப் பூச்சியத்தில் இருந்து மீண்டும் ஆரம்பிப்பதாகவே இருக்கும். புத்தளத்தில் கல்வி பயிலும் இவர்களின் பிள்ளைகளை அங்கிருந்து அகற்றுவதையும் சில சந்தர்ப்பங்களில் முழுக் குடும்பமுமே குடிபெயர்வதையும் இவ்வாறு திரும்பிச் செல்வது தேவைப்படுத்தலாம். இங்கே தமது பிள்ளைகளுடன் தாங்கள் வாழ்வதா அல்லது அந்தச் சூழ்நிலையில் தனியே மீண்டும் செல்வதா எனப் பெண்கள் தங்களைத் தாமே கேட்டுக்கொள்கின்றனர். பல பெண்கள் வடக்கிலுள்ள தமது காணிகளை ஒருபோதுமே விற்கவில்லை. ஏனெனில் அவை அவர்களின் அடையாளத்தின் அங்கமாகும்.

***"எனது வீடு எங்கேயுள்ளது என நீங்கள் கேட்டால், என்னால் ஒரு இடத்தினைக் குறிப்பிட முடியாது, இது இப்போது சமகாலத்தில் மன்னாரும் புத்தளமும் ஆகும்."***



புத்தளத்தில் வாக்களிப்பதற்காக 12000 முஸ்லிம்கள் பதிவுசெய்துள்ளனர். ஏனைய 38000 பேரின் வாக்குகள் இன்னும் மன்னாரிலேயே உள்ளன. ஆனால் தேர்தல் ஒன்றின்போது இவர்களில் அனைவருமே வாக்களிக்கச் செல்வதில்லை.

மன்னாரைச் சேர்ந்த முஸ்லிம்களுக்குப் புத்தளத்தில் உள்ள பிரதேச செயலகம் எவ்விதமான உத்தியோகபூர்வக் கடிதங்களையோ அல்லது ஆவணங்களையோ வழங்காது என்கின்ற காரணத்தினால் அவ்வாறான எந்தத் தேவைக்கும் அவர்கள் மன்னாரிற்கே மீண்டும் செல்லவேண்டியுள்ளது. எனவே புத்தளத்தில் பிறந்த தலைமுறையினைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் அங்கே வாக்களிக்கப் பதிவுசெய்யவில்லை.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வலுக்கட்டாயமாகப் புலிகளால் வெளியேற்றப்பட்டு மூன்று தசாப்தங்கள் உருண்டோடிவிட்ட நிலையிலும், இவ்வாறான ஒரு நிகழ்வு ஒருபோதும் நடக்கவே இல்லை என்பது போலவே அரசியல் தலைவர்கள் நடந்துகொள்கின்றனர் எனப் புத்தளத்தில் வாழும் சில வடக்கு முஸ்லிம்கள் உணர்கின்றனர். யுத்தத்தினைத் தொடர்ந்து வந்த வருடங்களில் கூட, இச்சமுதாயத்திற்கென மீள்குடியேற்றத்திற்கான ஒரு செயன்முறை ஒருபோதுமே முன்வைக்கப்படவில்லை. இப்போதும் கூட, மிகச் சரியாக எத்தனை பேர் இன்னும் இடப்பெயர்வில் இருக்கின்றனர், எத்தனை பேர் திரும்பி வந்துள்ளனர் மேலும் யாராவது இன்னும் அகதி முகாம்களில் வாழ்கின்றனரா என்பது பற்றிய தகவல்கள் இல்லாமல் இருக்கின்றன.

சிவில் சமூகத்தினர் யுத்தத்திற்குப் பின்னரான நிலைமைகள் மற்றும் போராட்டங்கள் பற்றிப் பணியாற்றுவதற்கும் கலந்துரையாடுவதற்கும் அரிதாகவே புத்தளத்திற்கு விஜயம் செய்கின்றனர். கடந்த 10 வருடங்களின் போது நடைபெற்ற இடைமாற்ற நீதி மற்றும் யுத்தத்திற்குப் பின்னரான இழப்பீடுகள் பற்றிய கலந்துரையாடல்களில் தாம் மறக்கப்பட்டுவிட்டதாகவே வடக்கு முஸ்லிம்கள் உணர்கின்றனர்.



# நீர்கொழும்பு

வெளியேற்றப்படலைக் கண்களால் காணாத இளம் நபர்களின் தலைமுறை ஒன்று உண்டு. ஆனால் இத்தலைமுறையினரே இடப்பெயர்வில் அவர்களின் குடும்பங்களில் பிறந்த முதலாமவர்கள். புதிய இடங்களில் முஸ்லிம் குடும்பங்கள் குடியேறிய சில மாதங்களின் பின்னர் அல்லது ஒரு வருடத்தின் பின்னர் இவர்கள் பிறந்தனர். கடந்து சென்ற 30 வருடங்களில் இந்த இளைய தலைமுறையினரும் அவர்களின் வாழ்வினை ஆரம்பித்துவிட்டனர். இவர்களின் பெற்றோர்கள் தங்கள் ஊர் என அழைக்காத இடங்களில் இவர்கள் வேர் கொண்டுவிட்டனர்.

***“போருதோட்டவில் எங்கள் குடும்பம் வாழ்ந்த காலத்தில் பள்ளிவாயலுக்கும் இந்த இடத்திற்கும் இடையில் என 1 கிலோ மீற்றர் தூரத்திற்குள் நாம் பத்துத் தடவைகள் வீடு மாறிவிட்டோம். அவ்வாறான வாடகை வீடுகளைப் போலல்லாது இந்த வீடு எங்களுக்குச் சொந்தமானது. எங்கள் வியாபாரத்தினால் நாங்கள் உழைத்த***

*பணத்தினைக் கொண்டு நாங்கள் வாங்கிய காணியில் எங்கள் பணத்தால் கட்டிய வீடு."*

## திரும்பிச் செல்வதற்கான முயற்சி

யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து உடன்வந்த வருடங்களில் சில குடும்பங்கள் அவை விட்டுச்சென்ற வியாபாரங்களை மீண்டும் தொடங்க யாழ்ப்பாணத்திற்குத் திரும்பின. சந்தைகளில் கடைகளைச் சொந்தமாக வைத்திருந்த ஆண்கள் சில வாரங்களுக்கொரு தடவை யாழ்ப்பாணத்திற்கும் நீர்கொழும்பிற்கும் இடையில் பயணம் செய்வர். இதனால் கிடைத்த வருமானம் சற்று அதிகமாக இருந்தது. நீர்கொழும்பில் வாழ்வினைத் தொடங்கிய காரணத்தினால் வடக்கிற்குத் திரும்புவதற்கான எதிர்பார்ப்பு பலருக்கு இல்லை. அவ்வாறு அவர்கள் திரும்பினாலும் அரசாங்கத்திடமிருந்து எவ்வித உதவிகளையும் அவர்கள் திட்டவட்டமாக எதிர்பார்க்கவில்லை.

நீர்கொழும்பில் வேலை கிடைக்காதவர்கள் அல்லது வியாபாரத்தினைத் தொடங்க முடியாதவர்கள் வடக்கிற்குத் திரும்பியுள்ளனர். நீர்கொழும்பு நகரத்தில் அல்லது புறக்கோட்டையில் இப்போது வியாபாரத்தினைச் சொந்தமாகக் கொண்டிருப்பவர்களுக்கு உள்ளது போன்ற வாய்ப்பு யாழ்ப்பாணத்திலும் கிடைக்குமா என ஏனையோர் சிந்திக்கின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகள் இந்து மாணவர்களைச் சேர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கும் சாத்தியம் அதிகம் என்பதால் தமது பிள்ளைகளுக்குக் கல்வி வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டு விடுமோ எனப் பெற்றோர் சந்தேகப்படுகின்றனர்.

## நலிவுற்றுள்ள சமுதாயம்

முற்றுமுழுவதும் முஸ்லிம்களைக் கொண்ட போருதோட்ட சமுதாயத்துடன் இடம்பெயர்ந்த மக்கள் கொண்டுள்ள உறவு சிக்கல்மிக்கதாக உள்ளது. 1990 இல் வடக்கினை விட்டு வெளியேறிய பெண்கள் தாங்கள் நீர்கொழும்புக்கு வந்தபோது தமக்குக் காட்டப்பட்ட பரோபகாரத்தினை நினைவுகூர்ந்தனர். உள்ளூர் மக்கள் விரைவாகப் பள்ளிவாயல்களில் தங்குமிடங்களை அமைத்து வடக்கு முஸ்லிம்களுக்கு உணவினை வழங்கினர். இறுதியில் குடும்பங்கள் வீடு தேட ஆரம்பித்தபோது அவற்றிற்கு வாடகை வீடுகளைப் பெற்றுக்கொள்ள உதவியும் செய்தனர்.

தங்களின் சகல ஆவணங்களையும் கைவிட்டு வந்தபோதிலும் போருதோட்டவிலுள்ள பாடசாலைகள் வடபுல முஸ்லிம் சமுதாயத்தினைச் சேர்ந்த மாணவர்களைப் பாடசாலைகளில் இலகுவாகச் சேர்த்துக்கொண்டதுடன் வழமையான ஆவணப்படுத்தல்களையும் தேவைப்படுத்தவில்லை. அடுத்தவருக்குப் பரோபகாரம் காட்டுவதன் முக்கியத்துவத்தினை இஸ்லாம் போதிக்கின்றது. எனவே தமக்குக் கிடைத்த உதவிக்கான காரணம் உள்ளூர்ச் சமுதாய மக்கள் மிகவும் சமயப் பற்றுள்ளவர்களாகவும் சமயப்

போதனைகளைச் சிரமேற்கொண்டு நடப்பவர்களாகவும் இருந்தமையினால் ஆகும் எனப் பெண்கள் நம்புகின்றனர்.

***“நாளாந்த வாழ்வில் நாம் உள்ளூர்ச் சமுதாயத்தினருடன் சேர்ந்தே வாழ்கின்றோம். நாம் அவர்களுடன் சிறந்த உறவினைக் கொண்டுள்ளோம். எவ்வாறாயினும் எம் வாழ்வு முழுவதும் எமக்கு ‘யாழ்ப்பாணத்து மக்கள்” என்றே முத்திரை குத்தப்பட்டுள்ளது. அவ்வாறுதான் நாம் குறிப்பிடப்படுகின்றோம்”***

இந்த வேறுபாடு பொதுவாகச் சண்டை சச்சரவுகளின்போதும் இணக்கப்பாடு எட்டாதபோதும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இரண்டு நபர்களுக்கிடையிலான பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள ஒருவர் வடக்கு முஸ்லிம் சமுதாயத்தினைச் சேர்ந்தவராக இருந்தால் அப்பிரச்சினை ‘யாழ்ப்பாண மக்களுடனான’ பிரச்சினையாகச் சுருக்கப்படுகின்றது. இதேபோன்று, நீர்கொழும்பிலுள்ள எல்லா முஸ்லிம்களும் இந்தப் பாகுபாட்டு உணர்வினைக் கொண்டிருப்பதில்லை என்பதை வடக்கு முஸ்லிம்கள் அறிவர். தமது ஒட்டுமொத்த சமுதாயமும் சகட்டுமேனிக்கு இதே பார்வையினால் பாரக்கப்படக்கூடாது என அவர்கள் விரும்புகின்றனர்.



நீர்கொழும்பில் வாழ்ந்த முப்பது வருட காலத்தில் வடக்கு முஸ்லிம்கள் அடைந்துகொள்ளக்கூடியதாக இருந்த பொருளாதார வெற்றியே இந்த மனப்பாங்கிற்கான காரணங்களில் ஒன்று என அவர்கள் கூறுகின்றனர். அதிகமான போருதோட்ட மக்கள் மீன்பிடியிலும் தச்சு வேலையிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த இரண்டு தொழில்களுமே அவற்றின் தன்மையில் எதிர்வுகூறப்பட முடியாதவையாகவும் உயர் வருமானத்தினை ஈட்டித் தராதவையாகவும் உள்ளன. அவ்வாறாயின் சொற்பமான உடைமைகளுடன் கையில் சொப்பிங் பைகளுடன் நீர்கொழும்பிற்கு வந்த வடக்கு முஸ்லிம்கள் எவ்வாறு தற்போது சொந்தமாகக் காணிகளை வைத்துள்ளனர் என்றும் வசதியான வீடுகளை வைத்துள்ளனர் என்றும் புறக்கோட்டையில் கடைகளை வைத்துள்ளனர் என்றும் இவர்கள் ஆச்சரியப்படுகின்றனர்.

பள்ளிவாயல்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவிகளோ பாடசாலை அபிவிருத்திச் சபையின் பதவிகளோ வடக்கு முஸ்லிம்களுக்கு ஒதுபோதும் வழங்கப்படுவதில்லை. நாளாந்த வாழ்க்கையில் உள்ளூர்ச் சமுதாயம் எவ்வித பிரச்சினைகளையும் உருவாக்காத அதேவேளை, அதிகாரப் பதவிகளுக்கு அவர்கள் ஒருபோதும் 'யாழ்ப்பாண மக்களை' அனுமதிப்பதில்லை.

**நிச்சயமற்ற எதிர்காலம்**

பெருமளவிற்கு முஸ்லிம் சமுதாயத்தின் மீது இலக்குவைக்கப்படும் இனவாதம் கடந்த தசாப்தத்தில் அதிகரிப்பதனை அவர்கள் அவதானித்துள்ளனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து இது அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியவர்கள் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது வடக்கின் ஏதாவது பிரதேசத்தினைச் சேர்ந்தவர்களாகவோ இருந்திருந்தால் உள்ளூர்ச் சமுதாயத்திடமிருந்து மேலதிக அழுத்தம் ஏற்பட்டிருக்கும் என அவர்கள் நினைக்கின்றனர்.

இலங்கையில் கொவிட் 19 இனால் ஏற்பட்டதாகப் பதிவுசெய்யப்பட்ட முதலாவது மரணம் போருதோட்டயில் வாழ்ந்து வந்த ஒரு வடபுல முஸ்லிமின் மரணமாகும். அவருக்கு வைரஸ் இருந்ததாக எவ்வித மருத்துவப் பதிவுகளும் காட்டாதபோதும் அவருடன் அவரின் குடும்ப உறுப்பினர்கள் நீண்ட காலத்தினைச் செலவழித்திருந்த போதிலும் அவர்களில் யாருக்கும் வைரஸ் தொற்று ஏற்படாதிருந்தபோதும் குடும்பத்தினரின் வேண்டுகோளை மீறியும் சமய நம்பிக்கைகளை மீறியும் இந்த நபரின் உடல் தகனம் செய்யப்பட்டது. குடும்பத்தவர்களுக்குத் தெரியாமலேயே உடல் தகனம் செய்யப்பட்டது (பாதுகாப்பான முறையில் ஆழத்தில் புதைப்பதற்கான தெரிவினை வழங்கிய சுகதார அமைச்சின் சுற்றுநிருபம் இருந்தபோதிலும்). இச்சம்பவத்தினை உடனடுத்து வந்த நாட்களில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உள்ளூர் மக்கள் அபரிமிதமாக உதவினர். வீட்டிற்கு உணவு கொண்டு வந்து இந்த மக்கள் வழங்கியதுடன் இழைக்கப்பட்ட தவறிற்காக வகைப்பொறுப்பினைக் கோரப் பலரும் அணி திரண்டனர். தொடர்ந்து வந்த மாதங்களில் இறந்தவரின் குடும்பத்தினர் பலரும் தனிமைப்படுத்தலில் இருந்தபோது இந்த உதவி

குறைவடைந்து சென்றது. இவ்விடயத்தினை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றால் நீர்கொழும்பு முஸ்லிம் சமுதாயம் தம் பின்னால் நிற்குமா எனக் குடும்பத்தினர் சந்தேகப்படுகின்றனர்.

நாட்டின் சிறுபான்மைச் சமுதாயத்தினர் மீது பெரும்பான்மையினர் கொண்டுள்ள மனப்பாங்கிற்கும் இந்த மனப்பாங்கிற்கும் இடையில் சில வடபுல முஸ்லிம்கள் ஒற்றுமையினை அவதானிக்கின்றனர். இலங்கையில் முஸ்லிம்களுக்கு இடம் இல்லை என எவ்வாறு சிங்களத் தேசியவாதிகள் கூறுகின்றனரோ அவ்வாறே வடக்கு முஸ்லிம்கள் நீர்கொழும்பில் முப்பது வருடங்களாக வாழ்ந்துவருகின்ற போதிலும் அவர்களுக்கு நீர்கொழும்பில் உரிமை கோர முடியாது என நீர்கொழும்பு முஸ்லிம்கள் பிரகடனப்படுத்துகின்றனர்.

அண்மையில் போருதோட்டவில் இரண்டு முஸ்லிம் குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட ஒரு பிரச்சினையில் வடக்கு முஸ்லிம் ஒருவர் மறைமுகமாகத் தொடர்புபட்டிருந்தார். பதற்றம் அதிகரித்தது. வடக்கு முஸ்லிம் நபர் மீது தவறு இல்லாதபோதும் பள்ளிவாயலின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை அனுப்பிய கடிதத்தின் மூலம் அந்த வடக்கு முஸ்லிமின் குடும்பத்தினை கிராமத்தினை விட்டுச் செல்லுமாறு கூறப்பட்டது. இவ்வாறு தங்களையும் வெளியேறுமாறு கூறும் ஒரு நாள் வந்துவிடுமோ என பல வடபுல முஸ்லிம்களும் ஐயுறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட கொவிட் மரணத்தினைப் பொறுத்த அளவில் இறந்தவருக்கு உண்மையிலேயே கொவிட் இருக்கவில்லை என்பது முழுச் சமுதாயமும் அறிந்த விடயமாகும். அதனை அவ்வாறு பிரகடனப்படுத்த பல் மட்ட இடையீடுகள் இருந்துள்ளன என்பதையும் சமுதாயம் அறிந்துள்ளது. கொவிட் தொற்று உண்மையிலேயே உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் அப்பிரதேசத்தில் தொடர்ந்தும் தங்களால் வாழ்ந்திருக்க முடியுமா என்பது பற்றிக் குடும்பத்தினர் நிச்சயமாக அறியாது உள்ளனர்.

***“இங்கே நிம்மதியாக எப்போது வரை எம்மால் வாழக்கூடியதாக இருக்கும் என்பது எமக்குச் சிர நேரங்களில் நிச்சயமாகத் தெரியாது. எவ்வாறாயினும் பலர் நீர்கொழும்பில் பிறந்துள்ளனர். பலரும் உள்ளூர்ச் சமுதாயத்தில் திருமணம் செய்துள்ளனர். ஒவ்வொரு புதிய தலைமுறையுடனும் உறவுகள் முன்னேற்றமடையும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.”***